## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.9/2024

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலாஜி | மதம் | : இந்து |
| த/பெ | : கணேசன் | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : பூ வியாபாரம் | வட்டம் | : திருத்தணி |

**22.10.2024**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 14.04.2004ம் தேதியிட்டு நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.10.1996ம் தேதியிட்டு எனக்கு கிரையம் கொடுத்த கணேசன் வடிவம்பாள் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)